**நிகவெரடிய பிரதேச சபை - 2023**
**-----------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிகவெரடிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிகவெரடிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் நிறைவேற்றப்படாத 24 செயற்திட்டங்கள் தொடர்பாக செயற்திட்ட கடன் கொடுத்தோர் முறையே ரூபா 40,364,473 தொகை மற்றும் ரூபா 172,600 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுப் பெறுமதி ரூபா 129,950 தொகைக்கான 02 வகையான மின்சாரப் பண்டங்கள் களஞ்சியப் பெறுமதியின் கீழ் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 3,749 தொகை, நுகர்வுப் பண்ட இருப்பின் பெறுமதி ரூபா 145,000 தொகை மற்றும் 04 காகிதாகி விடயங்களின் பெறுமதி ரூபா 45,900 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2023 ஆண்டின் போது நிலையான சொத்துக்கள் கொள்வனவு ரூபா 273,800 தொகை நிலையான சொத்துக்கள் கொள்வனவு என கணக்கீடு செய்திருக்காததுடன், கூட்டுப் பெறுமதி ரூபா 9,612,632 தொகைக்கான மீளாய்வாண்டின் நிர்மான வேலைக்கான செலவுகள் மேற்கொள்ளல் மூலதனப்படுத்தியும் இருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தற்போது விசாரணை செய்து வருகின்ற 09 வழக்கு அலுவல்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் எதிர் காலத்தில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு களஞ்சிப் பண்டக் கையிருப்பு ரூபா 8,690,752 இற்கான மீதியை உறுதிப்படுத்துவதற்காக முறையான பதிவேடுகள் சமர்ப்பிக்கபடாமையால் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தததது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | கடன் கொடுத்தோர் மீதிகள் முறைப் பிரகாரம் விரைவாக தீர்க்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவு 134 | சபையினால் அபிவிருத்தி செய்து சேவைகள் வழங்கும் பிரதேசத்தை முன்னேற்றப்பட்ட கிராமப் பிரதேசம் என வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | பிரிவிற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 | திருத்த வேலையொன்றிற்காக 2023 மார்ச் மாதத்தில் வழங்கியிருந்த முற்பணம் ரூபா 26,000 தொகை ஒன்று 2023 திசெம்பர் 31 வரையும் தீர்த்திருக்கவில்லை. | - மேற்படி - | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571 | ரூபா 1,334,032 இற்கான காலவதியாகிய 116 வைப்புக்கள் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க ஆதவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | பிரதேச சபைகள் நிதி மற்றும் நிருவாக விதி | | | |
| (i) | விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பாக பட்டியலொன்று மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை ஒன்று ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் வீதவரி எழுதுனரினால் தயாரிக்கப்பட்டு தலைவரின் கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | விதி 61 | வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொண்டு பெற்றுக்கொண்ட பட்டியலில் அடங்கியுள்ள அனைத்து கைத்தொழில்கள், கைத்தொழில் வரி தொடர்பான வரி உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், வரி செலுத்தும் வியாபாரங்கள் மாத்திரம் பதிவேட்டில் உட்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வரி செலுத்தப்படாத கைத்தொழில்கள் தொடர்பான பதிவேட்டில் உட்படுத்தப்படாததுடன், அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | விதி 218 | நியமனம் செய்யப்பட்ட சபையொன்றினால் வருடாந்த காணிகள் மற்றும் கட்டிடங்கள் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | பொது நிருவாகச் சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 கொண்ட பொதுத் துறையில் மனித வள அபிவிருத்தி செய்தல் தொடர்பான சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் 3,4,6.1,6.3,6.5 பிரிவுகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | வாகனங்கள் / இயந்திர உபகரணங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | உள்ளூராட்சி சுற்றறிக்கைகள் | | | |
| (i) | இலக்கம் 2010/02 மற்றும் 2010/07/30 திகதிய சுற்றறிக்கையின் பிரிவு 1.2. ii. | விடயங்களின் மாற்றும் முறைமை மற்றும் அவ்வாறு மேற்கொள்ளல் வசதியீனமான உத்தியோகத்தர்களுக்கான 02 வருடங்களுக்கு ஒருமுறை பிரவு மாற்றும் முறையொன்று செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | இலக்கம் 03/2015 மற்றும் 2015/11/02 திகதிய சுற்றறிக்கை | வீதி விளக்குப் பதிவேடு நாளதுவரையாக பேணிச் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,981,285 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 39,728,102 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | | 2023 | | | | 2022 | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | வீதவரி மற்றும் வரி | 7,524 | 15,664 | 8,833 | 6,830 | 7,120 | 6,351 | 6,299 | 7,338 |
| ii. | வாடகை | 20,496 | 19,131 | 14,111 | 5,020 | 16,712 | 5,849 | 10,944 | 5,768 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,761 | 1,869 | 1,862 | 7 | 1,676 | 509 | 1,562 | 113 |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 188,363 | 91,125 | 33,324 | 57,800 | 37,965 | | 52,158 | 61,034 |
| | மொத்தம் | 218,144 | 127,789 | 58,130 | 69,657 | 63,473 | 12,709 | 70,963 | 74,253 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட அறவிடப்படாத வீதவரி மீதி ரூபா 6,799,619 தொகையாக காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலுவை மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்காத ஏக்கர் வரி ரூபா 31,141 தொகை காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள தொலைப்பேசி செலுத்துகைத் கோபுரங்களிலிருந்து 2023 ஆண்டிற்குரிய வியாபார வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | வியாபார வரி உரிய முறையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 4,249,291 தொகை மற்றும் நிலுவைக் குத்தகை ரூபா 771,454 தொகையாக இருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலுவை மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் ஏனைய வருமானம் சிட்டையிடல்களின் மூலம் ரூபா 57,800,660 தொகை மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலுவை மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 45,103,250 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,697,410 தொகையாக இருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலுவை மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2023 ஆண்டில் நகர மண்டபம் 18 சந்தர்ப்பங்களில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டு ரூபா 420,000 இற்கான வருமானம் உழைத்திருந்த போதிலும், 30 சந்தர்ப்பங்களில் நகர மண்டபத்தை வெளித்தரப்பினருக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. நகர மண்டபத்திற்குரிய நீர் பில்பத்திரம், மின்சார பில்பத்திரம், பராமரிப்புச் செலவுகள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றமையால் நகர மண்டபத்தை இலவசமாக வெளித் தரப்பினருக்கு வழங்கி சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானம் ஒன்றினை இழந்திருந்ததுடன், தேவையற்ற செலவுகள் மேற்கொள்ளலும் ஏற்பட்டிருந்தது. | - மேற்படி - | சபைக்கு சொந்தமான ஆதனங்கள் வருமான உழைப்புக்காக முறைப்பிரகாரம் பயன்படுத்த வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 85(அ) பிரிவுக்கு இணங்க சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் அனைத்து வீடு, கட்டிடங்கள் மற்றும் காணிகளுக்காக போதியளவு மற்றும் முறையான கழிவறை வசதிகள் வழங்குதலை உறுதிப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல் சபையின் கருமம் ஒன்றாக இருந்து போதிலும், அது தொடர்பான போதியளவு கவனம் ஒன்று செலுத்தியிருக்கவில்லை. சபையின் அதிகாரப் பிரதேசத்தின் முறையான கழிவறை வசதிகள் காணப்படாத | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | பந்திக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 937 ஆக காணப்பட்டது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக மூலதனச் செலவு ரூபா 141,726 தொகை மற்றும் மீண்டுவரும் செலவு ரூபா 8,635,852 தொகை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குப்பை விற்பனையின் மூலம் கிடைத்திருந்த வருமானம் ரூபா 131,200 தொகையாக காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | உக்கக்கூடிய மற்றும் உக்காத குப்பைகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து வருமானம் உருவாக்கும் அலுவல்களை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 14 ஊழியர்களிடம் ரூபா 519,740 இற்கான அறவிடப்படாத ஊழியர் கடன் மீதியொன்று காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | ஊழியர் கடன் உரிய முறையில் அறவீடு செய்யப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுப் பெறுமதி ரூபா 2,460,955 இற்கான 05 வருடங்களை விட பழமையான செலுத்த வேண்டிய மீதியொன்றினை தீர்த்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | வீதவரிப் பெறுமதி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒருமுறை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் பிரதேச சபையினால் வீதவரி பெறுமான மதிப்பீடு 2017 ஆண்டிலேயே இறுதியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - | வீதவரி பெறுமதி மதிப்பீடு கால ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | அங்கத்துவ இலக்கம் குறிப்பிடப்படாத காரணத்தினால் 2023 ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கொடுப்பனவு செய்யும் போது 05 சந்தர்ப்பங்களில் ரூபா 8,564 தொகை பெறுமதியான மிகை விதிப்புத் தொகையொன்று ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டி நேரிட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | உரிய முறையில் கடமைகள் மேற்கொள்ளாமையினால் ஏற்பட்டிருந்த தேவையற்ற செலவொன்றாக காணப்படுகின்றமையால் உரிய தரப்பினருக்கு எதிராக செயற்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தளபாடங்களும் பொருத்துக்களும் மற்றும் மோட்டார் வாகனங்களும் இயந்திர உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறைப் பிரகாரம் பேணிச் சென்றிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | - மேற்படி - |
| (ஆ) | முறைப் பிரகாரம் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு சபைக்குச் சொந்தமான 58 காணிகள் மற்றும் மயானங்களின் பௌதீக உளமையினை உறுதிப்படுத்துவதற்காக எல்லை வேலிகள் உரிய முறையில் போடப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | அனைத்துக் காணிகள் மற்றும் சொத்துக்களின் உளமை பாதுகாக்கப்பட வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான வீதி விளக்குகள் இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்காமையால் கணினி வலையமைப்பில் உள்ளீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | வீதி விளக்குகள் இலக்கமிடப்பட்டு கணினி வலையமைப்பில் உள்ளீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | சபையினால் பராமரிக்கப்படுகின்ற 161 மயானங்களில் 159 மற்றும் 15 காணிகளின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | சொத்துக்களின் உரிமையை உரித்தாக்கப்பட வேண்டும். |
| (உ) | 2023 ஆண்டில் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 19,000,000 தொகைக்கான மோட்டார் கிரேடர் வாகனத்தை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 3.5 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொடவெஹர கொங்கிரீட் உற்பத்தி நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமரா முறைமை 2022 ஜூன் மாதம் முதல் செயற்படாத நிலையில் காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | விளைவற்ற சொத்துக்களை செயற்படு நிலைக்கு மாற்றப்பட வேண்டும். |
| (ஆ) | கொங்கிரீட் உற்பத்தி நிலைய வளாகத்தில் நீர் பவுஸர் ஒன்று துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | சபைக்குச் சொந்தமான 258 குழாய் கினறுகளில் 58 உம் மற்றும் 100 பொதுக் கினறுகளில் 20 உம் செயற்படு மட்டத்தில் காணப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 3.6 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதீடு செய்யப்படாத 04 நிர்மாண வேலைகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 3,471,624 தொகை செலவிடப்பட்டு மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 வருமான விடயங்களில் மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் இடையே 59 சதவீதம் முதல் 725 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டதுடன், 06 செலவு விடயங்களில் மதிப்பீட்டு செயற்பாடுகள் மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே 20 சதவீதத்தை விட கூடிய முரண்கள் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | வருமான மதிப்பீடு கூடியளவு யதார்த்தமாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களின் கீழ் இனங்கண்டிருந்த குறிக்கோள்களை நெருங்குவதற்கு ரூபா 458,091 தொகை செலவிடப்பட்டு மீளாய்வாண்டின் போது செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை நெருங்க வேண்டும். |